தொகுதி- ருஎ :: பகுதி-கூ — Vol. 57 :: No. 9

செந்தமிழ்

திருவள்ளுவர்

ஆண்டு 1992

பிலவ—மார்கழி

DECEMBER — 1961

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

(வெளியிட்ட நாள் 22—3—62)

உ

உள்ளுறை

1 நல்லிசைப் புலமை நலம்
பண்டித, இராமசுப்ரமண்ய நாவலர், தக்கலை 259

2 ஓவியன் வரலாறு
S. அகத்தியலிங்கம்,
இந்தியானா பல்கலைக்கழகம், அமெரிக்கா 267

3 அறிவியல்
கு. மா. திருநாவுக்கரசு 276

4 உலா
திரு. மது. ச. விமலானந்தர், எம். ஏ., 280
தமிழ் விரிவுரையாளர், சரபோசி மன்னர் கல்லூரி, தஞ்சாவூர்.

5 மதிப்புரை 283

"செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர், தமிழவேள். திரு. பி. டி. இராசன். B. A., (Bar-at-Law) M. L. C.

2. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர். ஔவை சு. துரைச்சாமிப் பிள்ளை, தியாகராசர் கல்லூரி, மதுரை.

3. டாக்டர், திரு, மா. இராசமாணிக்கனார் M. A. L. T. M. O. L. Ph D. சென்னை.

4. திரு. பேராசிரியர், பி. சோதிமுத்து. M. A. B. D.

5. திரு. முகமது சுல்தான் M. A. B. L., வழக்குரைஞர், மதுரை.

6. திரு. வீ. சண்முகசுந்தரம் M. A. B. L. செயலாளர் மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர், மதுரை.

7. திரு. கி. பழனியப்பன், துணைத்தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம்

8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர், தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

உ
கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி. ருஎ Vol. 57	திருவள்ளுவர் ஆண்டு 1992 பிலவ — மார்கழி 1961 — December	பகுதி. கூ No. 9

(251 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நல்லிசைப் புலமை நலம்

பண்டித. இராமசுப்பிரமணிய நாவலர், தக்கலை

ஓசை

யாப்பில் ஒழுகும் ஓசை பொருளியல்பு பற்றி அமைந்தது. இன்னின்ன பொருள் இன்னின்ன ஓசையில் யாக்கப்படல் வேண்டும் என்னும் பிற்றைக்கால இலக்கணம் செய்யுளிலக்கியம் பற்றி அமைந்ததேயாம். ஆகலின், யாப்பிலக்கணம் வெளிப்படாத காலமொன்று இருந்திருத்தல் வேண்டும். அக்காலத்துச் செய்யுள் ஓசையின்றி நிகழ்ந்தன எனல் ஒவ்வாது. கூறப்புகுந்த பொருளுக்கேற்ற வாறு ஓசையமைத்து முன்னையோர் பாடி வந்தனர். அவ் வோசையளவியல் பிற்காலத்துப் பயிற்சியினின்றும் ஒழிந்த தாகலின், முன்னையோர் செய்யுளின் ஓசையும் அதனுள் அமைந்த மாத்திரைகளும் எழுத்துக்களும் நோக்கிக் கணக் கிட்டுப் பின்னையோர் யாப்பிலக்கணம் செய்தனர். முன்னை யோர் பாடிய ஓசைக்கியைய எழுத்துக்கள் செய்யுட்களில் அமைந்தன. பின்னையோர் எழுத்துக்களை எண்ணிச்சேர்த்து ஓசையை ஆக்குகின்றனர். ஓசை உணர்ச்சியின்மையே

அதற்குக் காரணமாம். ஓசைக்கேற்றவாறு எழுத்து அளந்து சேர்ப்பினும், சிலவிடத்து ஓசைவழுவிவிடுகின்றது. அது யாப்பிலக்கணம் நன்கு அமையாமையாலாமென்க. வெண்பாவுக்கு உரிய சீர்தளை முதலியன யாப்பிலக்கணத்திற் கூறியவாறு அமைப்பினும், சில வெள்ளோசை பெறாது போவதுண்டு. இற்றைக்காலப் புலவர் பலர் இலக்கண அமைதியை மட்டும் நோக்கி அத்தகையவற்றையும் வெண்பா என்று கொள்கின்றனர். அது பெரும்பிழை என்பது நச்சினார்க்கினியர் முதலியோர் தொல்காப்பியச் செய்யுளியலுரையில் உதாரணங்காட்டி விளக்கிச் சேறலால் உணரப்படும். ஆகலின், யாப்பிலக்கணத்தினும் சிறப்ப ஓசையே கருதப்படல் வேண்டும். பழஞ் செய்யுட்களைப் பலதரம் பயின்றார்க்கு அவ்வோசையியல் எளிது விளங்கும். அது விளங்குவதன் முன் யாப்பிலக்கண மாத்திரையானே செய்யுளியற்றப் புகுவது நாண்டக்கது பல வெளியீடுகளிலும் யாப்பல் யாப்புக்கள் மலிந்து காணப்படுகின்றன.

இனி, இவ்வோசையமைதியின் பயன் யாது? என்பது ஆராயப்படல் வேண்டும் ஓசை பொருளுக்கேற்ப அமைந்தது என்பது முன்னரே கூறினும். உரைநடையினும் கூர்ந்து நோக்குவார்க்கு, நுண்ணிய ஓசையொழுக்குப் புலப்படும். கூறப்புக்க பொருளை அதற்கேற்ற ஓசையின்றிக் கூறுமிடத்துப் பொருள்வலன் இழக்கப்படுதலின், பொருளுக்கேற்ற ஓசையமைத்துக் கூறுவதே மக்கள் வழக்கமாய் உள்ளது. ஒருவன் இன்பஉரையாடுமிடத்தும் சினந்துரைக்குமிடத்தும் வழங்குகின்ற குரலும் ஓசையும் ஒருபடிப்பட்டனவாயிருப்பனவல்ல என்பதை நாம் நன்கு உணர்வோம். இன்னுரை கூறுமிடத்துச் சொல்லப்புக்க பொருண்முடியை (வாக்கியப் பொருளை) இனிமை எழத்தக்க படுத்த ஓசையிலும் சினந்துரைக்குமிடத்துச் சினக்குறிப்பு அரும்பத்தக்க எடுத்த

ஓசையிலும் உரைப்பது இயல்பு. ஓசை (ஒலிநடை) பொருண்மைக்குத் தக்கவாறு வேறுபடும் இயல்பே செய்யுளோசைக்குங் காரணமாம். நூல்களில் ஒவ்வோரிடத்து ஒவ்வோரோசை கடைப்பிடிக்கப் படுவதற்குக் காரணம் வேறுபட்ட பொருளமைதியே. அன்பு பற்றிய பொருணிகழ்ச்சிக்கு உரிய ஓசை சினம் பற்றிய பொருணிகழ்ச்சிக்கு ஒவ்வாது. ஆதலால் அவ்விடத்து ஓசைமாற்றிக் கூறப்படும். இன்னணம் பொருட்பன்மை பற்றி ஓசை வேறுபாடுகள் பல்கின. ஒவ்வோரோசையமைதியும் ஒவ்வோர் செய்யுட்கு உரியன என வரம்பு செய்யப்பட்டன. எனவே, எல்லாச் செய்யுளும் எல்லாப் பொருண்மைகளுக்கு மேற்புடையன வல்ல என்க. ஆதலானே, யாப்பிலக்கணத்திலும் இன்னின்ன செய்யுள் இன்னின்ன பொருட்கூற்றுக்குரியன என வரைந்து கூறப்பட்டன. அகலிக் கூறுமிடத்து அகவலும் செப்பிக் கூறுமிடத்துச் செப்பலும் முதலாக வரையறை செய்யப்படுவது யாப்பு நோக்கி உணர்க. இன்னின்ன செய்யுட்கள் அகத்திற்கு (இன்பவியல்) ஆகா என ஒதுக்கியதும் அச்செய்யுளோசை அகப்பொருள் கூறுதற்குப் பொருத்தமில்லாமை பற்றி என்று உணர்க.

செய்யுளோசை நன்கு கைவரப் பெற்றூர்க்கு உரையாடுவது போலவே செய்யுளை விரைவில் அமைக்க இயலும். அல்லாதார் எழுத்தெண்ணியும் சீரியற்றியும் தளையுணர்த்தியும் வருத்தமெய்துகின்றனர். அம்முயற்சிக்கே நெடுநேரம் வீணுகின்றது. எழுத்து முதலியவற்றின் அளவிலே கருத்தூன்ற வேண்டியிருத்தலான், பொருளின் ஒழுக்கு கெடுகின்றது. செய்யுள் வாய்ப்பின்றிச் சிதைகின்றது. செய்யுளியற்றலில், ஓசை உணர்ச்சியுடையவர், ஒருரை எய்துதற்குரிய நெறியை நன்கு பயின்று அதனூடே விரைவாக வருத்தமின்றிப் போவாரையும் அஃதில்லாதார், கல்முண் முதலிய

நீக்கி வழிதெளித்து அஞ்சி மென்மெலச் செல்வாரையும் ஒப்பர். பின்னையோரது போக்குத் தகைப்படுவது போல ஓசையுணர்ச்சி இல்லாருடைய ஓசையொழுக்கும் பொரு ளொழுக்குந் தகைப்படுகின்றன. இக்காலத்தார் ஓசைப் பயிற்சியில் உள்ள மூன்றுவது யாப்பிலக்கணத்தைத் துரு வித் துருவி, இறுதியில் 'இஃது நமக்கு வராத கலை' என்று செய்யுட்கலையைக் கைசோர விடுகின்றனர்.

செய்யுட்கலை இயல்பிலே அமையத் தக்கதேனும் வருந் துவார்க்கு வராததன்று. இயல்பில் ஒருவர்க்கு ஒன்று உண் டாயிற்றேல், அதுவும் முற்கொண்ட பயிற்சிப் பயனேயாதல் வேண்டுமாதலால், எப்பொழுதேனும் பயிற்சியின்றி எக்கலை யும் எய்துவதன்று. புலமை உள்ளம் உடைய சிலரும் செய்யுளியற்ற இயலாது தம் புலமையை வளரா மாய்க்கின் றனர். அன்னோர் செய்யுளோசையில் நன்கு பயின்று வருவ ரேல், விழுப்பயன் பெறுவர் என்பது ஒருதலை.

செய்யுட் பொருள் வடிவு

வடிவு பருப்பொருள்வடிவு நுண்பொருள்வடிவு என இருவகைத்து. அவை இரண்டனையும் வகைந்து கவின்பட ஆய்ந்து உணர்வார்க்கு உள்ளத்து உவகை மீக்கொள்கின் றது. ஒரு பொருளைக் குறித்த முற்றுணர்ச்சி அல்லது தம் அறிவு ஏற்றுக் கோடற்கு உரிய உணர்ச்சி உள்ளத்தே படியும் போழ்து இன்பம் அரும்புவது இயல்பு. செய்யுட் பயிற்சியில் இன்ப முளதாதற்குக் காரணம் பயில்வார் தமது அறிவு வேட்கை நிரம்புவதேயாம். *நிரம்பாத பொருள்களை

---

* The Cause of the hearer's and reader's pleasure in rhythem is that their expectation is fulfilled; they are met by a recurrence at an expected intervel of an experience that they home recently had

Jaggan

உடைய ஒரு செய்யுள் நிரம்பிய அறிவுடைய உள்ளத்தை மகிழ்விப்பதில்லை. ஏனெனில், அச்செய்யுள் பயில்வாரது அறிவு வேட்கையை நிரப்புவதில்லை. ஆகலான், செய்யுட்கள் தாம் புலனுறுத்தப் புக்க பொருள் வடிவை நன்கனம் விளக்கி நிற்றல் வேண்டும்,

பருப்பொருட்கள் உட்கவினும் புறக்கவினும் பற்றிச் சுவைபட உணர்த்தப்படும்; நுண்பொருள் உட்கவின் பற்றி உணர்த்தப்படும். நுண்பொருட் புறக்கவின் மெய்ப்பாட்டு வகையான் புலப்படுமென்க. இன்பம் என்பது நுண்பொருள். [பண்பையும் பொருளென்பது நையாயிகர் வழக்கு] அது பற்றி எய்தும் மெய்ப்பாடு முகமலர்ச்சி இன்சொற்றோற்றம் முதலியன. சினம் என்பது ஒரு நுண்பொருள். அது பற்றிய மெய்ப்பாடு கண்சேர்த்தல் முகங்கறுத்தல் முதலியன. மெய்ப்பாடுகட்கு ஏதுவாகலான், இந் நுண்பொருட்களும் மெய்ப்பாடு எனப்பெயர் கூறப்படுதலுண்டு.

'**தாமரை மலர்ந்தது**' என்பது தாமரையின் மலர்ச்சியை உணர்த்துமேனும், அப்பொருள்வடிவு வளம்பெற்றிலது. ஆகவே, அஃது அத்துணை இன்பத்தைப் பயப்பதின்றும். 'தாமரை என்னும் மணங்கு பகலவனாகிய தன் காதலற்கண்டு முகஞ்செவ்விபட அலர்ந்தாள் எனின், அப் பொருள்வடிவு வளம்பெற்றதாம். இனி ஒரு செய்யுளகத்துப் பெரிதும் தலைமைப் பொருள்வடிவை மட்டும் வளம்படுத்து உரைப்பர் புலவர். இன்றேல், கூறப்புக்க பொருள் ஒரு செய்யுளகத்து அமையாது ஆகலின் சிறப்புடைப்பொருள் பலவற்றைப் பலப்பல செய்யுட்களில் வகைந்து வளம்படக் கூறுவர், பெருங்காப்பியப் புலவர்,

அசை முதலியவை

செய்யுளில் அமைக்கப்படும் சொற்களனைத்தும் பொருள்வளம் மிக்கு ஒளிர்தல் வேண்டும். இல்லாவிடத்துச் செய்யுள் பொலிவிழக்கும். அசைகள் செய்யுளிடத்துப் பொருள்படா எனப் பலரும் ஒதுக்குகின்றனர். அடி நிரம்புவ்தற்காக வாளா தரப்பட்டனவல்ல அசைகள். அவற்றின் நோக்கம் பொருட்டொகுதியை வளம்படவைப்பதுமாகும். **எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'** எனும் தொல்காப்பியச் சூத்திரத்தான் பொருள்படவாராதன சொற்களல்ல என்பது பெறப்படுமென்பது, ஏ. ஓ. மாது, அன்று, ஆல், அம்ம, வாழி முதலிய எல்லா அசைகளும் ஏற்புடைப் பொருள் விளக்கத்திற்கு அமைத்த சொற்குவையுடன் கவின் பொதுள நின்று பொருட்டொகுதியைப் பொலிவுறுத்தும். ஆதலால், எல்லாப் பொருள்வயினும் எல்லா அசைகளும் வைத்தற்கு உரியனவல்ல. சிலர் அசைகளை யாண்டும் நிறுவலாம் என்னும் பிழை உணர்ச்சியுடையராய் அவற்றை ஒவ்வாவிடங்களில் அமைத்துப் பொருளைச் செகுக்கின்றனர். 'கலைக்கோட்டு முனிவரனைப் பாசிழைப் பார்வையர் உரோமபத மன்னனகர்க்குக் கொணர்காலை. அவர் அவனை நோக்கி, 'எம்மிடம் இது இது' எனக்கூறி மயக்கி அழைத்துச் சென்றனர் என்னும் வரலாறு 'கூறுமிடத்து' **அம்ம இதுவிதுவென அகலு நீணெறி'** எனக் கம்பர் கூறுவது காண்க. இதனுள், **அம்ம** என்பது வாளா நின்றதன்று; 'யாம் கூறுவது கேட்டி' என்னும் பொருள்பயந்து நின்றது. அசைகட்குப் பலவிடத்தும் இலக்கண நூலார் பொருளுரைத்துச் செல்வதும் அவை பொருள்பட வழங்கப் படல் வேண்டும் என்னும் நோக்கம் பற்றியாம். அம்முனிவன் தான் மயக்கப்பட்டமை உணர்ந்து சினந்தான். அரசனும் பிறரும் வேண்ட அவனது சினம் கரந்தது என்பது

கூறுமிடத்துக் கம்பர், 'உள்ளூறு வெகுளிபோ யொளித்த தாமரோ' என்பது காண்க. இதனுள், 'அரோ' என்பது அவ்வெகுளி விரைவிற் கரந்தமை பற்றிய வியப்பையும் அது கரத்தல் முறை என்பதையுமுணர்த்தாநின்றது. அசைகள் சொற்களைப் பிணிக்க வந்தனவல்ல, ஒருதலையாகச் செய்யுட்பொருளை இயைபுகெழும அசைத்து (பிணித்து) நிற்பனவாகலான், அசைஎனும் பெயர் போந்தது என்க. எப்பொருளிடத்து எவ்வசை நிறுவப்படல் வேண்டுமென்பது நல்லிசைப் புலவர் செய்யுளுேக்கி உணரப்படும்.

எதுகை மோனை முதலியவும் பொருட்பொருத்தமுற அமைதல் வேண்டும். எதுகை முதலியவற்றுக்கெனப் பொருளைச் சிதைப்பதும் வேறுபடுப்பதும் இன்னாதன. சிலர் எதுகைக்கெனப் பிழைச்சொற்களை அமைக்கின்றனர்.

> "சந்திர னுதிக்கக் கண்டு தாங்கிய குமுதமெல்லாம்
> அந்தர மலர்ந்து மிக்க வழகினைக் கொடுத்த வாமே

இதனுள் 'தாங்கிய குமுதம்' என்றது பொருட்சிறப் பின்று. குமுதத்திற்கும் தாங்குதற்கும் விசேட இயைபு கூறப்படவில்லை. அந்தரம் என்பது பொருள் வழுப்பட்டது. அந்தரம் ஆகாயம். 'ஆகாயத்தில் குமுதம் மலர்ந்தன' என்பது பொருண்மலைவு ஆதல் காண்க. சிலர் இங்ஙனம் தமக்கும் பொருள் விளங்காத சொற்களை எதுகைக்கென அமைப்பது வியத்தக்கது. ஈற்றில் நின்ற ஏகாரவசை பொருட்

பொலிவைப் பயந்ிலது. 'கண்டு' என்பதும் 'கொடுத்த' என்பதும் பொருட்சிறப்பின்றி நின்றன.

'சந்திர னுதிப்ப வாவித் தண்ணெழிற் குமுத மெல்லாம்
கந்தமுற் படவ லர்ந்து கவின்பயந் தொளிர்ந்த வம்மா''

எனின், வாய்ப்புடைத்தாம்.

'மங்கையாம் பெண்ணைக் கண்டு
மனமது மயங்கி நின்றான்'

என்பதனுள், பெண் என்னும் பொருண்மை 'மங்கை' என்னுஞ் சொல்லில் அடங்குமாதலால், அதுமிகையாம். 'மங்கையாள் தன்னைக் கண்டு' என்றாயினும், 'மங்கையைக் கண்டபோதே' என்றாயினும் இருப்பின், அழகு சிறந்து நிற்கும். இன்னோரன்ன பலவும் செய்யுள் இயற்றுவார்க் கருத்துறற்பாலன.

(258-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒலியன் வரலாறு

ச. அகத்தியலிங்கம்,
இந்தியானு பல்கலைக்கழகம், அமெரிக்கா.

ஒலியன் (Phoneme) |k| ஒலியனையும் அதன் சார் பொலிகளையும் கீழ்க்கண்ட விதங்களில் ஏதாவது ஒன்றில் எழுதலாம்.

|K| (k) (x) (g) அல்லது
(k)
|K| (x)
|g|

0.6 ஒலியன் என்பது தன்னேடொத்த ஒன்றே பலவோ சார்பொலிகளைக்கொண்ட ஒலிக்குழுவினைக் குறிப்பதாகும். அச்சார்பொலிகளுள் ஒன்று வந்த இடத்தில் இன்னென்று வருவதில்லை.[3]

ஒலி எல்லாமொழிகளிலும் காணப்படுவது. ஆனல் ஒலியன் என்று கூறும்போது அது ஒரு மொழியின் ஒலியனையே குறிக்கும். ஒரு மொழியில் ஒலியனுக அமைந்துள்ள ஒலி இன்னெரு மொழியில் ஒலியனுக அமைய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

1.0 இத்தகைய ஒலியன் கொள்கை மிக அண்மைக் காலத்தில் தோன்றியதாகும். மொழிகளுக்கு எழுத்து உருவத்தைத் தந்தவர்கள் இதனை மனதில் கொண்டிருந்தார்கள் என்ருலும் கொள்கையாக (theory) மலர்ந்தது மிக அண்மைக் காலத்தில்தான். இந்த வரலாற்றைச் சுருக்கமாகக் கூறுவதுதான் இக்கட்டுரையின் நோக்கம்.

(3) Phoneme is a class of Sounds which are phonetically Similar and either in Complementary distribution or in free variation and which have a characteristic Set of interrelationships with each of the other classes in that System.

An Introduction to Descriptive Linguistics·

1.1 பழங்காலம். பழங்காலத் தொட்டே இந்நிலையை மக்கள் உணர்ந்திருந்தனர். இவ்வொலியன் எண்ணம்[1] மனதில் இருந்த காரணத்தால்தான் மொழிகளில் பலவிதமான சார்பொலிகள் காணப்பட்டாலும் அவற்றைக் குறிக்க ஒரு சில வெழுத்துக்களையே காண முடிகின்றது. தமிழில் முன்னால் காட்டியது போன்று ககர வொலியனின் சார்பொலியாக [k] [x] [ɟ] போன்றவை காணப்பட்டாலும் ஒரே எழுத்துக் கற்பித்துள்ளனர். ஆனால் மலையாளம், இந்தி, கன்னடம் போன்ற மொழிகளில் நான்கு வகையான ககர எழுத்துக்கள் காணப்படுவதன் காரணம் 4 ஒலியன்களைக் குறிப்பன அவை. பின்னிய மொழி (Finnish) போமியன் (Bohemian) (ஸ்)பெயின் (Spanish) போன்ற மொழிகளின் எழுத்துக்கள் இக்கொள்கைக்கு மிகவும் பொருத்தமாக அமைந்துள்ளனவாம்[2].

கி. பி. 1450ஐ ஒட்டிக் கொரியநாட்டு மன்னன் செ-சாங் கொரிய மொழிக்கு எழுத்து வகுத்தான் இம்மொழியின் நெடுங்கணக்கும் இக்கொள்கைக்கு மிகவும் பொருந்த அமைந்துள்ளதாம். எடுத்துக்காட்டாக ஒன்று கூறலாம். (p‘) என்ற ஒலியும் (b) என்ற ஒலியும் கொரிய மொழியில் (H) என்ற எழுத்தால் எழுதப்படுகின்றன. காரணம் ஒன்று வருகிற இடத்தில் ஒன்றுவருவதில்லை. (Complementary Distribution) இந்த இரண்டு ஒலிகளையும் (allophones) ஒரே ஒலியனாகவே அவன் எண்ணியதால் தான் ஒரே எழுத்துக் கற்பித்திருக்க வேண்டும். இதே நிலை எல்லா மொழிகளிலும் ஓரளவு காணக் கிடக்கிறது. தமிழிலும் ககர, பகர எழுத்துக்கள் பல ஒலிகளைக் குறிக்க எழுதப்படுவது கண்கூடு.

---

1. இதனை ஒலியன் உள்ளுணர்வு (Phonemic intution) என்பார் சபீர் (Eedward Sapir)

2. Bloomfield Language P.P.86.(1933 Henry Holt and Co)

1.2 கார்டினே இத்தகைய எண்ணங்கள் பண்டைய இலக்கண வாசிரியர்களிடம் எழுத்துக் கற்பித்தவர்களிடமும் ஒருவாறு இலைமறை காயாக விளங்கிய போதிலும் முதன்முதலாக இதனைப் பற்றிய ஒரு தெளிவான கொள்கையை (Theory of Phonemes) உருவாக்கியவர் ருசிய நாட்டில்வாழ்ந்த கார்டினே (Jan Baudouin de courtenay) என்பவரைச்சாரும். இவர் பிறப்பால் பாலி (Polish) இனத்தைச் சார்ந்தவர். இவர் முதன்முதலாக ருசிய நாட்டில் பீட்சுபர்க்கு என்ற இடத்தில் ஆசிரியராகவும் பின்னர் காசானில் (Kazan) 1875முதல் 1900வரை மொழித்துறைப் பேராசிரியராகவும் அதன் பின்னுல் "டார்பர்ட்" (Dorpat) கார்கொ போன்ற இடங்களில் பேராசிரியராகவும் பணியாற்றினர். மீண்டும் பீட்சுபர்க்கு சென்று பலவிதமான சிறந்த மொழியியல் ஆராய்ச்சியை நடத்திவந்தார். இவர் காசானில் இருந்தபோதுதான் தனி மொழியியல் நிறுவனம் (Linguistic School) ஒன்றை நிறுவினர். பல மாணவர்கள் இவரிடம் பயின்றனர். தம்முடைய வாழ்நாளின் கடைப் பகுதியை இவர் போலந்து நாட்டில் கழித்தார்.

1870ஐ ஒட்டி இவரிடம் ஒலியன் பற்றிய கொள்கை உருவாயிற்று என்னலாம். இவர் இது பற்றிய தெளிந்த எண்ணம் கொண்டவராக இருந்தபோதிலும் அதிகமாக வெளிப்படுத்திக்கொள்ளவில்லை. 1894ல் இவரது நூல் ஒன்று ருசிய மொழியில்வெளிவந்தது. இதனுடைய மொழிபெயர்ப்பு ஒன்று 1895ல் வெளியாயிற்று. எனினும் இவருடைய மொழியியல் பற்றிய கொள்கைகள் குறிப்பாக ஒலியன் கொள்கை இவர் தம மாணவர்களால்தான் ஐரோப்பிய நாட்டில் பரவின. "டென்னிஸ் வார்டு" (Dennish Ward) என்பவர் இவரைப் பற்றிச் சோவியத்நாட்டுக் கலைக்களஞ்சியில் உள்ள கட்டுரை ஒன்றை மொழிபெயர்த்துள்ளார். அக்கட்டுரையின்கண் இச்செய்திகள் அடங்கியுள்ளன.

மேலும் இவரைப் பற்றிய குறிப்பு ஒன்று "சுவீட்" (HenrySweet) பற்றி 'ரன்' (Wrenn) எழுதிய கட்டுரை ஒன்றில்காணப்படுகிறது.[1]

1.3 சுவீட் (Henry Sweet) 1845-1912. இதே போன்ற ஒரு கொள்கை ஆங்கில நாட்டைச் சார்ந்த சுவீட் டிடமும் உருவாயிற்று. சுவீட் ஆங்கில நாட்டில் சிறந்த ஒலி யியல் (Phonetics) அறிஞராக விளங்கியவர். ஒலி பற்றியும் ஆங்கில மொழியின் ஒலிபற்றியும் பலபல நூல்கள் எழுதி யுள்ளார். ஒலியியலின் தந்தை என்று மதிக்கப்படுபவர். இவர் கார்டினே பற்றியோ அவருடைய ஒலியன் கொள்கை பற்றியோ தெரிந்தவரல்லர். இவர் இங்கிலாந்திலும் அவர் தெற்கு ருசிய நாட்டிலும் இருந்தார்கள். ஒருவருடைய கொள்கைத் தோற்றத்திற்கு இன்னொருவர் காரணமாக இருந்தார் என்று கூற முடியாது. சுவீட் தன்னுடைய நூற் களில் "Phoneme" என்ற சொல்லைப் பயன்படுத்தியது இல்லை. ஒலிக்கும் (Phones) ஒலியனுக்கும் (Phonemes) உள்ள வேற்றுமையை நன்கு அறிந்திருந்தார். ஒலியை அவர் "narrow types of Phoeetic transcription" என்றும் ஒலியனை அவர் "Broad types of Phonetic transcription என்றும் கூறுவர்[2]. இவரைப் பற்றிக்குறிப்பிடும்போது ரன்

1. The distinetion between Phoneme and phone is to some extent implicit in Baudouin de Courtenay's Russian essay on the dialects of Italian Slovens intitled "Opyt Fonetiki Rezyanskikh Goverow (Petersburg and Warxa 1876, but it was first clearly drawn by his polish, pupil Kruszewski in a Russian essay of 1879 De Courtenay further touched on it in his Russian Study "On ektorykh Otdelakh Sravnitelnoi Grammaiki Slovyanskikh Yazykov warza 1881 and fully developed and elerborted with Some what changed and more psychological approach in his famous Polish worg.

Proba Teorgi Alternacyg fonetycznych Cracaw 1895 'and Graman Version of the following Year·

2. A hand book of Phoneties (Henry Sweet) P. P. 103.

இவரைக் கார்டினேயுடன் ஒப்பவைத்துப் பேசுகிறார்[1].

1.4 பால்பாசி (PaulPassy 1859-1940) இவர் பிரஞ்சு நாட்டைச் சார்ந்தவர். சிறந்த மொழியியல் அறிஞர்களுள் ஒருவராகக் கருதப்படுபவர். இப்போது அனைத்துலக ஒலியியல் கழகம் (International Phonetic Association) என்று அழைக்கப்படுகின்ற நிறுவனம் அமையக் காரணமாக இருந்தவர்களுள் இவரும் ஒருவர். இவரும் ஒலியன் பற்றிய கொள்கையைப் படிப்படியாக உணர்ந்தார். இவருக்குச் சுவீட்டிடம் மிகுந்த மதிப்பு உண்டு. இக்கொள்கையை எவருடைய தொடர்பின்றியும் தனியாக இவர் உணர்ந்தபோதிலும் சுவீட்டுடனும் கார்டினேயுடனும் தொடர்புகொண்டு பல ஆராய்ச்சிகள் செய்தார். அனைத்துலக ஒலியியல் கழகத்தின் கொள்கைகளை இவர் வரையறுத்தபோது அதன் கொள்கைகளுள் ஒன்றாக ஒலியன் கொள்கைக் கோட்பாடு படிந்திருப்பதைக் காண முடியும். அதில் வெவ்வேறு பொருள்களைத் தருகின்ற விதத்தில் அமைகின்ற ஒவ்வொரு ஒலிக்கும் பிரத்தியேகமான எழுத்து அமைப்பது கழகத்தின் கொள்கை என்று இவர் எழுதினர்.[2]

1. Sweet may virtually be regarded as a Co-equal with Baudouin de Courtenay in discovering the phoneme. One can not be sure whether Sweet or de Courtenay was the first to realise this new and most important Conception, since they worked the one in London and the other in Kazan in South Russia-in entire ignorance of each others studies But in 1887 Sweet had Clearly recognized by his distinction of "Broad Phonemic" symbols to represent in effect functional features or units of speech in English, the idea which is at the base of de Courtenay's elaborately reasoned explanation of the phoneme and 1877 was the year when probably both scholars reached their findings.

(By C. L. Wrenn On Henry Sweet
Philological Society Transactions 1946 PP. 189)

2. There should be a seprate letter for each distinctive sound (The Phonetic teacher Aug 1888)

1.5 **இங்கிலாந்தும் ஒலியன் கொள்கையும்:** ஒலியன் கொள்கை இவ்வாறு இங்கிலாந்திலும் பிரஞ்சு நாட்டிலும் இலை மறை காயாக இருந்தது. கார்டினேயின் மாணவர்களுள் ஒருவரான "செர்பா" (Scerba) என்பவர் 1911ல் கார்டினேயின் கொள்கை பற்றிய கட்டுரை ஒன்றை வெளியிட்டார் ஆனல் அக்கட்டுரை தெளிந்த முறையில் அமையாததால் பலருக்கு அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனல் இரண்டு ஆண்டுகட்குப்பின் இன்னொரு மாணவரான வார்சாவைச் சார்ந்த "டைடஸ்" (Titus Benni) என்பவரால் இக்கொள்கை இங்கிலாந்தில் பரவியது. இவருடன் தொடர்பு கொண்டு திரு. டானியல் ஜோன்சு இக்கொள்கை பற்றிய தெளிவான கருத்தை அறிந்தார். இதன் காரணமாக 1915 முதல் இங்கிலாந்து பல்கலைக்கழகத்தில் இத்துறை பாடமாகப் புகுந்தது. இதனல் பல ஆராய்ச்சியாளர்கள் இது பற்றி ஆராயவும் பல சிறந்த கருத்துக்களும் கொள்கைகளும் தோன்றி வளரவும் வகை ஏற்பட்டது. மேற்கு ஐரோப்பிய நாட்டினரும் பின்னர் அமெரிக்க நாட்டினரும் இத்துறையில் அதிகக் கவனம் செலுத்தினர்.

1.6 **பீச்** (D. M. Beech) இவர் அமெரிக்க நாட்டைச் சார்ந்தவர். இவர் 1915ல் அமெரிக்கநாட்டுக் கார்வார்டு பல்கலைக்கழகத்தில் தமது 'B. S' பட்டத்தைப் பெற்ருர். இவரது துறை வேதிநூல். பின்னர் இவர் சீனநாடு சென்று அங்கு ஆங்கிலம் வேதிநூல் போன்ற பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியராகப் பணியாற்றினுர். அப்போது இவருடைய கவனம் சீனமொழியிலும் மொழித்துறையிலும் சென்றது. இதன் காரணமாக இவர் இங்கிலாந்து சென்ருர். இவருக்கு 'டானியல் ஜோன்சின்' தொடர்பு கிடைத்தது. இங்கு இவர் சைனமொழியின் "சுரம்" (Tone) பற்றி ஆராய்ந்துகொண்டிருந்தார். இதன் காரணமாகப்

பலவித முடிவுகள் ஏற்பட்டன. இதனல் சிறந்த சில கலைச் சொற்கள் உண்டாயின. (Toneme. Tonemic) இது பற்றி அறியாமலே அமெரிக்க மொழியியல் அறிஞரான பைக் (K. L. Pike) தன்னுடைய நூலில் இக்கலைச் சொற்களைத் தாமாகவே கண்டுபிடித்து உபயோகித்துள்ளார். இத் துறையில் சிறந்தவர்களான டுபட்ஸ் காய் (TrubetsKoy) ரோமன் ஜாகப்சன் (RomanJakobson) போன்ற பலர் இவைகளை உபயோகப்படுத்தி மக்கள் மத்தியில்கொண்டு வந்தனர்.

1.7 **பிராக் நிறுவனம்** (Pra gue School) மொழியியல் துறையில் குறிப்பாக ஒலியன் பகுதியில் பிராக் நிறுவனம் மிகவும் செல்வாக்குப் படைத்தது. இதனை ஆரம்பித்தவர்களும் பின்னர்ச் சேர்ந்தவர்களும் இத்துறையில் மிகச் சிறந்த பணி புரிந்துள்ளனர். 1920ல் மத்தேசியஸ் (V. Mathesius) என்பவரின் உழைப்பால் பல அடங்கிய குழு ஒன்ருல் இஃது ஆரம்பிக்கப்பட்டது. கிழக்கு ஐரோப்பிய மொழியியல் அறிஞர்கள் இதனை வளர்த்தவர்களுள் டுபட்ஸ்காய், (1890–1938) கார்செஸ்கி (S. Karceswki) ரோமன் ஜாகப்சன் போன்றவர்கள் மிகவும் முக்கியமானவர்கள். இதனைப் பிராக் நிறுவனம் (Cercle Linguistie de Prague) என்று அழைத்தனர். இவர்கள் தங்கள் ஆராய்ச்சி முடிவுகளைத் தங்கள் இதழ் ஒன்றில் வெளியிட்டு வந்தனர் (Travaux du cercle Linguistigue de Praque). மொழியியல் துறையில் பல துறைகளில் இவர்கள் ஆராய்ந்த போதிலும் ஒலியன் பற்றி ஆராய்ச்சிகளும் முடிவுகளும் மிகவும் போற்றத்தக்கனவாகும். டுபட்ஸ்காய் எழுதிய "Grundzuge der Phonologie" என்ற நூல் ஒப்புயர்வற்ற சிறந்த நூலாக இன்றும் திகழ்கிறது.

1.8 அமெரிக்கா: அமெரிக்க மொழி யியல் அறிஞர்கள் 1920 வரையிலும் இது பற்றி அதிகக் கவனம் செலுத்தவில்லே. முதன் முதலில் இத்துறையில் இறங்கியவர் திரு. சபீர் (Edward Sapir) ஆவார். இவருடைய சிறந்த நூலான (Language) "மொழி"யில் ஒலியன் என்ற சொல்லே இவர் பயன்படுத்தவில்லே எனினும் இது பற்றிய செய்திகள் அரும்பி நிற்பதைக் காண முடியும். இவருடைய "ஒலி ஒற்றுமை" (Sound Pattern) என்ற கட்டுரையிலும் பல குறிப்புகள்காணக்கிடைக்கின்றன. ஆனல்1933ல் இவர் எழுதிய கட்டுரை ஒன்றில் (La Relative psychologique des Phonemes) ஒலியன் பற்றிய கொள்கை நன்ருக மலர்ந்திருப்பதைக் காண முடியும்.

1930க்குப்பின் அமெரிக்க நாட்டில் இக்கொள்கை நன்கு வளர்ந்தது; பரந்தது. புளூம்பீல்டுவின் (Language) 'மொழி' நூல் 1933ல் வெளிவந்தது. இந்நூல் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது. இதன் காரணமாக அமெரிக்க மொழி யியல் அறிஞர்கள் மேலும் மேலும் ஆராயத் தொடங்கினர். தெளிவுபெருத எத்தனேயோ செய்திகள் தெளிவுபெற்றன. பலப்பல கலேச் சொற்கள் உருவாயின. மயக்கம் கண்டு கிடந்த பல விடங்கள் தெளிவு அடைந்தன. எத்தனேயோ கட்டுரைகள், ஆராய்ச்சி முடிவுகள், நூற்கள் வெளியாயின. சுவாடாஷ் (Swadesh M.) டாடல் (Twaddel) பைக் (K. L. Pike), பிளாக் (Bloch B.) போன்ற பலபல ஆராய்ச்சியாளர்கள் இத்துறையை வளர்த்துள்ளனர்.

1.9 ஒலியன் வகையில் எழுதுவதற்கும் (Phonemic) ஒலிவகையில் (Phonetic) எழுதுவதற்கும் வேறுவேறு முறை முதலில் கையாளப்படவில்லே. இதனல் மயக்கம்

இருந்தது. ஒலிவகையில் எழுதும்போது [ ] இத்தகைய கோடுகட்கிடையே எழுத வேண்டும் என்றும் ஒலியன் வகையில் எழுதும்போது | | இத்தகைய கோடுகட்கிடையே எழுத வேண்டும் என்றும் முதலில் கூறியவர் திரு. பிளாக் ஆவார். இத்தகைய எளிய முறை எத்தனையோ பெரிய மயக்கத்தை மாற்றியது.

1.10 இன்னும் இக்கொள்கை பற்றிப் பேசும்போது அதிகமாக உபயோகப்படுகின்ற சொல் "Complementary distribution" என்பதாகும். இச்சொல்லை முதன் முதலாகக் கண்டு பயன்படுத்தியவர் "சுவாடாஷ்" ஆகும்.

1.11 மேலும் நன்குபயன்படுகின்ற இன்னொரு சொல் (allophone) சார்பொலி என்பது. இதனை முதலாகப் பயன்படுத்தியவர் திரு. பிளாக். ஆனால் கண்டுபிடித்தவர் யார் என்று தெரியவில்லை.

சென்ற இதழ்த் தொடர்ச்சி

அறவியல்

(கு. மா. திருநாவுக்கரசு)

6. இன்றைய அறநிலை

வீட்டு வாழ்வும் நாட்டுக் கடமையும்
ஈட்டிய செல்வமா யிணைவதே யேற்றம்;
நாட்டுக் கடமைகள் நாளும் புகுந்தே
மனத்தூய் மையை மாய்ப்பது காணீர்!
இல்வாழ் வென்னும் ஏற்றமார் வாழ்வில்
நல்லறங் கொண்டே நன்மனத் தோடே
வாழவே யியலா வகையைக் காணீர்!
இல்வாழ் வினிலே நல்லற மில்லை!
கல்மன மாக்கும் பொருட்டுறை கலந்தே
காதல் வாழ்வைக் கரைப்பது காணீர்!
எங்கும் பொருளே! எதற்கும் பொருளே!
பொருளெனுஞ் சிக்கலே பொய்யிலா வாழ்வைப்
பொய்ய தாக்கிப் புன்மனத் தோடே
அல்லும் பகலும் அலைந்தே திரிய
ஆட்டிப் படைக்குங் கொடுமை காணீர்!
பொருட்டுறைச் சிக்கலை யறவே போக்கின்
இன்றுள இழிவை எளிதில் நீக்கி
இல்லற வாழ்வாம் நல்விளக் கினையே
ஏற்றி வைத்தே இனிதாய் வாழ்வோம்.

7. மழையின் மாண்பு

உயிர்கள் பிறத்தல் வாழ்தல் இறத்தல்
ஓயா தியலுங் காட்சியை யுணர்த்தும்
வானின் சிறப்பை வளமா யுரைத்தார்;
கடலிற் றோன்றி வானி லியங்கி

கல்விற் ருக்கிக் கரைவ தியல்பாய்
அமைந்தது நீவிர் அறிவி ரன்றே?
ஒழுக்க முடைமை அமைந்த அறத்தில்
ஒழுங்கா யியலும் உயர்மழைச் சிறப்பை
உரைக்குந் திறமே உவத்தற் பாற்றே!
வான மின்றேல் கடல்வள[1] மில்லை!
வான மின்றேல் நிலவள[2] மில்லை!
வான மின்றேல் மனவள[3] மில்லை!
வகையா யுரைத்த வளத்தைக் காணீர்!
மாசிலா தமைத்த வான்சிறப் புடனே
மாரியின் மாண்பை மகிழும் வண்ணம்
எண்குறட் பாவில் இயம்பின ரன்றே!
[4]கொழுநனைத் தெய்வமாக் கொண்டே தொழுவாள்
குளிர் மிகும் மழையைப் பெய்வித் திடுவாள்;
[5]ஒப்புர வாளன் ஒள்ளிய சிறப்பை
உயர்மழை கொண்டே யுவமித் துரைப்பார்;
[6]வானையுங் கோலையு நோக்கி வாழ்வன
வளமா ருலகுங் குடியு மன்றே;
[7]செங்கோ லாட்சிச் சீர்பெறு நாட்டில்
சிறக்கும் வண்ணம் மழையும் பெய்யும்;
[8]கொடுங்கோ லாட்சி நடமிடு நாட்டில்
குடிகள் அழியப் பெயலும் பெய்யா;
[9]மாட்சிமை மிக்க மழையிலை யாயின்
மாண்புறு முயிர்கள் மாய்தல் போல
ஆட்சித் தலைவன் அருளில னாயின்
அவனது குடிகள் அழிதல் திண்ணம்:
[10]வானம் வறங்கூர்ந் தனையே துடைத்தே

---

1) குறள்-17; 2) குறள்-13, 14, 16; 3) குறள்-18, 19, 20; 4) குறள்-55
5) குறள்-211; 6) குறள்-542; 7) குறள்-545; 8) குறள்-559;
9) குறள்-557; 10) குறள்-1010

வண்மைச் செல்வர் வறுமை யுடைமை;
[1]தலைவன் தலைவிக் களிக்கு மளிக்குத்
தண்ணார் மழையை யுவமித் துரைத்த
தகைசால் சிறப்பைக் கண்டே யுவப்பீர்!
இத்தகு மிடங்களி லியம்பிய காரணம்
இதனது பெருமை யறிந்ததா லன்றோ?
அமிழ்தின் சிறப்பை ஆற்ற லருளை
யாவு முரைத்த புலவ ரொருவர்
அவரே தமிழ்த்திரு வள்ளுவ ரெனினே
யார்தாம் மறுப்பர்? அறிவீர்! அவையீர்!

ஒப்புரவினுயர்வு

ஆற்ற லுடையோர் அரும்பெருஞ் செல்வர்
யார்க்கு மயலார் உதவியே யின்றி
வாழ்த லியலா தென்பதை யறிவீர்!
மற்றவ ருழைப்பால் தம்வாழ் வமைவதைத்
தெற்றெனத் தெளிவோர் தாமும் பிறர்க்குப்
பயன்பட வாழ்தலே பண்பார் அறமாம்!
பயன்படும் வாழ்வில் கைம்மா றின்றிப்
பலர்க்கு முதவலே பாரி லுயர்ந்த
ஒப்புர வென்னும் உயர்பெரும் அறமாம்,
"ஒப்புர வாளன் ஓங்குயர் செல்வம்
ஊருணி நிறைந்த தொக்கு" மென்பார்,
ஊருணி யுலகி லுளநாள் வரையே
பாழ்போ காதே பன்னா ளமைந்தே
பாங்கா யார்க்கும் பரிவுட னுதவும்;
தன்னிற் சேர்ந்த நீரைத் தந்தே
தகவுடன் விளங்குந் தன்மையைக் காணீர்!
பெருமைகொள் ஊருணிப் பெற்றியை யுடையான்

1) குறள்-1192

பேரறி வாளனும் உலகவாம் பண்பினன்.
"பயன்மர முள்ளூர்ப் பழுத்ததை யொக்கும்
நயனுடை யாளன் செல்வ" மென்பார்.
தன்னுடைப் பொருளை யார்க்கு மெளிதில்
தகவுட னளிக்கும் பயன்மரம் போன்றுன்
நயனெனும் பண்பை நாளுங் கொள்வான்.
"மருந்தாய்ப் பயன்படு மரத்தை யொக்கும்
பெருந்தகை யாளன் செல்வ" மென்பார்;
தன்குறை யென்றுஞ் சிறிதும் நோக்கா
மன்னுயிர்த் துயரை மாண்புட னேக்கித்
தன்னுடைப் பொருளைத் தருதலே யன்றித்
தன்னையே ஈயுந் தகவினைப் போன்றுன்
மன்னிய அருளை மாண்பாய்க் கொள்வான்.
ஒப்புர வாளன் உதவும் முறையில்
முப்பெரும் பண்பாய் முகிழ்க்குந் திறத்தைச்
செப்பினுர் தெளிவாய்ச் செங்காப் போதார்.

முடிவு

முப்பால் தனிலும் அறமே யொளிரும்;
முப்பா லினையும் அறமே யாளும்;
முப்பா லிற்கும் அறமெனப் பெயரே:
இத்தகு சிறப்பை யியல்பாய்ப் பெற்ற
அறமெனுங் கடலுள் ஆவலோ டிறங்கி
அருமையா மிரண்டோர் முத்தினை யெடுத்தே
ஈந்தேன் சிறிதே இயன்ற வகையான்
என்றே யியம்பி இனிதுற வணங்கி
அன்பாய் நன்றியை அறைகுவன் மகிழ்ந்தேன்.

வாழ்த்து

வாழ்க மதுரைத் திருவள் ளுவர்கழகம்!
சூழ்க அறநெறியே யிவ்வுலகில்!—மாழ்க
மறவழி யெல்லாம்! மலர்கவே மாண்பாய்த்
திறனறி வள்ளுவனுர் சீர்!

உலா

திரு. மது. ச. விமலானந்தம், எம். ஏ.
(தமிழ் விரிவுரையாளர், சரபோசி மன்னர் கல்லூரி, தஞ்சாவூர்)

முன்னுரை:

தமிழில் அமைந்த 96 வகைப் பிரபந்தங்களுள் 'உலா' வும் ஒன்ருகும். இதனை 'உலாப்புறம்' எனவும் உரைப்பர். பெருங் காப்பியங்களில் பாட்டுடைத் தலைவர் பவனி வருதல் குறிக்கப்பெறும். அதனை மட்டுமே உயிர் நாடியாகக் கொண்டு, அரசனே, தெய்வமோ உலா வருவதும், உலா நிகழ்ச்சிகள் உரைத்தலும், உலாக் கண்டு ஓகைகொண்ட பலதிறப் பெண்டிர் பெற்றியும் பகருவதே உலா இலக்கியம்.

அடிப்படை:

'ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப' (தொல். புறத்–30) என்பதே, கைக்கிளைமேற் பாடப்பெறும் உலாப் பிரபந்தங்கட்கு அடிப்படையாகும். இதற்கு உச்சிமேல் புலவர் கொள் நச்சினர்க்கினியர், 'பக்கு நிறை காமம் ஊரிற் பொதுமகளிரோடு கூடிவந்த விளக்கமும் பாடாண்டிணைக்கு உரித்தென்று கூறுவர் ஆசிரியர்; அது பின்னுள்ளோர் எழு பருவமாகப் பகுத்துக் கலிவெண்பாட்டாகச் செய்யும் உலாச் செய்யுளாம்' என உரை கூறியுள்ளார். இது கொண்டு பிற்கால உலாப் பிரபந்தங்கட்கு அடிப்படையாக அமைவது இத்தொல்காப்பியச் சூத்திரம் எனல் சாலும்.

இலக்கணம்:

இதனது இலக்கணத்தைப் பாட்டியல் நூல்கள் பகருமாறு:

திறந்தெரிந்த பேதை முதலேழுவர் செய்கை
மறந்தயர வந்தான் மறுகேன்—றறைந்தகலி
வெண்பா வுலாவாம்.

(பன்னிரு பாட்டியல்)

இளமைப் பருவமுடைய தலைவனது குலம், குடிப்பிறப்பு, மரபு முதலாயவற்றைக் கூறி, அவன் வீதியில் உலா வந்த ஞான்று அவ்விடத்து வந்து குழுமிய பேதை முதற் பேரிளம் பெண் ஈருகவுள்ள ஏழு பருவ மாதர்கள் மால்கொள்ளும் மாண்பினை முறையானே நிறைபட நவில்வது உலாவாகும். இதனையே இலக்கண விளக்கப் பாட்டியலும்,

விழைதோல் குடிமுதல் விளங்க வுரைத்தாங்கு
இழைபுனை நல்லார் இவர்மணி மறுகின்
மற்றவன் பவனி வரஎழ் பருவம்
உற்றமா ஞர்தொழப் போந்தது உலாவாம் (சூ. 98)

என்றும் நவநீத பாட்டியல்,

தெருவினிற் பேதை முதலேழு வோர்கள் திறத்துவகை
ஒருவனை யேத்துங் கலிவெண்பா தூதுலா (சூ–45)

எனவும் சாற்றும். இதனல் எழுவகை மங்கையரும் திருவுலாப் புறத்து வருவானைக் கண்டு, மயங்குவதாகப் புலவனுல் பாடப்படுவது உலாவெனவும்; பருவப் பெண்களாகக் குறிக்கப் பெறுவோர் பொதுமகளிர் (தனிப்பெண்டுகள்) ஆவர் என்றும்; அது கலிவெண்பாவாற் பாடப்பெறல் வேண்டுமென்றும் தெளியலாம்.

சிலர் இவ்விதி நச்சினர்க்கினியர்க்கு உடன் பாடன்று என்று கூறி, அதற்குத் துணையாகக் கீழ் வருவனவற்றைச் சான்ருகக் காட்டுவர். 'வேட்கை பிறவாப் பருவத்தாரும், பிறக்கின்ற பருவத்தாரும், பிறந்த பருவத்தாரும் என மூன்று கூருக்கிக் கூறுகின்ருர். 'பேதையல்லை மேதையங் குறுமகள், பெதும்

பைப் பருவத்து ஒதுங்கிளை புறத்தென(அகம்–7)என்றலின், பேதை வேட்கை பிறவாப் பருவத்ததாலும், பெதும்பை வேட்கை பிறக்கின்ற பருவத்ததாலும் பெற்ரும். இவை யொழிந்த மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை யென்னும் பெயர்கள் வேட்கை பிறந்த பருவப் பெயர்களாம். அன்றி அவையும் பருவத்தை யுணர்த்தும் பெயர்களெனின், அது முதனூல்களிற் கூருமையானும், சான்ருேர் வேறுபாடு கூருமல் மகளிர்க்குப் பொதுப் பெயராகச் செய்யுள் செய்த லானும் தேவர்க்கும் அது கருத்தென்ரும் இனி உலாவிற்கு அங்கமாகப் புதிய நூல்களிற் விதி இதற்காகாமை யுணர்க' (சிந்தாமணி–152 உரை) என்று அவர் எழுதிச் சென்ற உரையால் இஃதுணரலாம்.

இச்சிற்றிலக்கிய இலக்கணத்தைச் சற்று விரிவாகவும் விளக்கமாகவும் பன்னிருபாட்டியலார் சாற்றுவர்:

முதனிலை பின்னெழு நிலையுலா வெண்கலி
பேதை முதலா எழுவகை மகளிர்கண்
டோங்கிய வகைநிலைக் குரியான் ஒருவனைக்
காதல்செய் தலின்வரும் கலிவெண் பாட்டே (56–4)

உலாவில் இருபெரும் பகுதிகள் உள. முதற்பகுதி பவனி வரும் தலைவனது திறம் பகர்வதாம்; தலைவனது குடிப் பிறப்பு, அவனது நீதி நெறிமுறை, மரபுவழி, பொருளீட் டும் பான்மை, கொடுத்து மகிழும் குணம் போன்றன பகன்று; உலாப் போதற்காக வைகறையில் அவன் நீராடுத லும், ஆடை அணி புனைதலும், பழைய நகர் மாந்தர் எதிர் கொள்ளுமாறு மாடமருகு எங்ஙனும் மதம்மிகு களிறேறி பவனி வருதலும் முதற் பகுதியில் அடங்கும், இதனையே 'முதனிலை' எனக் கூறி,

குடிநெறி மரபு கோளல்கோடை விடியல்
நன்னீ ராடல் நல்லணி அணிதல்

தோன்னக ரேதிர் கோளல் நன்னெடு வீதியின்
மதகளி றூர்தல் முதனிலை யாகும். (48)

எனவும் விளக்குவர். பிற்பகுதி, 'பின்னெழுநிலை' எனப்படும்.

எழுநிலையும் இயம்புங் காலை:
பேதை பெதும்பை மங்கை மடந்தை
அரிவை தெரிவை பேரிளம் பெண்ணெனப்
பாற்படு மகளிர் பருவத் தாதல்
நோக்கி உரைப்பது நுண்ணியோர் கடனே (50)

ஏழு பகுதியாகிய பருவத்துள், அப்பருவத்துக்குரிய தன்மைகளையும், மென்மைகளையும், நன்கு விளக்கி அந்நங்கையர் நிலைகளையும் அவர் தம் கூற்றுக்களையும் அமையப் பாடுவது பிற்பகுதியில் அமையும்.

இதனால் உலாவின் முற்பகுதி பவனி வரும் தலைவனது திறத்தையும், பிற்பகுதி அவனைக் கண்டு காதல் கொண்ட மகளிர் தரமும் தன்மையும் கூறுவதாகும் என்பதுணர்ந்தோம். தலைவனைப் பற்றிய பகுதியில் அவனது தசாங்கங்கள் கூறப்படுதல் வேண்டும் என்பதும், பருவமகளிர் பற்றிய பகுதியில் எழுபருவ மாதர்களின் செயல்களாகிய சிற்றில், பாவை, அம்மானை போன்றன இடம் பெறல் வேண்டும் என்பதும் இன்றியமையாதனவாம். இவற்றை,

பேதைமுத லேழ்பருவப் பெண்கள் மயக்கமுற
ஓதுமறு குற்றனேன் வேலோனேன்—றேதம்
அறக்கலி வெண்பாவி னக்க லுலாவாம்
புறத்தசாங் கந்தாங்கிப் போற்று.

எனும் பிரபந்தத் திரட்டு கொண்டும்;

சிற்றில் பாவை கழங்கம் மனையே
பொற்புறு முசல் பைங்கிளி யாழே

பைம்புன லாட்டே பொழில் விளையாட்டே
நன்மது நுகர்தல் இன்ன பிறவும்
அவரவர்க் குரிய ஆகும் என்ப

எனும் பன்னிரு பாட்டியலாலும் தெளியலாம்.

பெயர் பெறுமாறு:

பாட்டுடைத் தலைவன் உலா வருதலே உயிர்நாடியாக அமைவதாலும், அவனது பவனியே பெரிதும் சிறப்பிக்கப் படுதலானும் இஃது இப்பெயர் பெற்றது என்பர். உலா வருதலைப் 'பவனி வருதல்' எனவும் வழங்குவர்.

தலைமையும் தகைமையும்:

உலாப் பெறுதற்குரியார் இன்னின்னர் என்ற வரையறையும் உண்டு. புலவன் தான் ஏத்துகின்ற தெய்வத்தையோ, போற்றுகின்ற அடியாரையோ, தன்னைப் புரந்த அரசனையோ, வள்ளலையோ விதந்து பாடுவர்.

வேந்தர் கடவுளர் விதிநூல் வழியுணர்
மாந்தர் கலிவெண் பாவிற் குரியார். (53)

எனப் பன்னிரு பாட்டியல் பகரும். இனி இவ்வுலா பாடப் பெறுதற்குரியார், 16 யாண்டு முதல் 48 யாண்டு ஆகும் வரையிலும் பாடுதற்குரியர் என்ற வயது வரையறையுண்டு என்பதை

நீடிய நாற்பத் தெட்டின் அளவும்
ஆடவர்க் குலாப்புறம் உரித்தென மொழிப (51)

என்ற பன்னிரு பாட்டியல் கொண்டு உணரலாம்.

முடி புனைந்தும், மணம் புரிந்தும், வெற்றி பெற்றும் உலா வருதல் உண்டு. முடிபுனைந்து உலா வந்தமை உதயணன் வரலாறு (பெருங்கதை) கொண்டும்; மணமுடித்து

உலா வருதலைச் சிவகன் கதை (சிவகசிந்தாமணி) மூலமும்; வெற்றி பெற்ற பின்னர் உலா வந்ததை இராம காதை (கம்பராமாயண) வாயிலாகவும் அறியலாம். இராமன் உலா வந்த ஒண்மையை

பேதைமார் முதல்கடைப் பேரிளம் பெண்கள்தாம்
ஏதிலார் மாரவேள் ஏவவந்து எய்தினர்
ஆதிவானவர் பிரான் அணுகலால் அணிகோள்கார்
ஓதியார் வீதிவாய் உற்றவான் உரை செய்வாம்,

எனக் கம்பர் கழறுவது கொண்டுணர்க.

பருவ மகளிர் பெற்றியும் பான்மையும்:

பாட்டுடைத் தலைவர்க்குரிய காலநிலை கண்டோம். அன்னவர்பால் மையலுறும் கண்ணியர்தம் காலநிலை காண்பாம். எழு பருவமாதர்களது வயது நிலையினைப் பொய்கையார் கீழ் வருமாறு குறிப்பிடுகின்றார்:

பேதைக் கியாண்டே ஐந்துமுதல் எட்டே
பெதும்பைக் கியாண்டே ஒன்பதும் பத்தும்
மங்கைக் கியாண்டே பதினொன்று முதலாத்
திரண்ட பதினு லளவுஞ் சாற்றும்
மடந்தைக் கியாண்டே பதினைந்து முதலாத்
திடம்படுமே ஒன்பதிற் றிரட்டி செப்பும்
அரிவைக் கியாண்டே அறுநான் கென்ப
தெரிவைக் கியாண்டே இருபத் தொன்பது
ஈரைந் திருநான் கிரட்டிக் கொண்டது
பேரிளம் பெண்டுக் கியல்பென மொழிப

ஆனால் வச்சணந்திமாலையிலும், இலக்கண விளக்கப் பாட்டியலிலும், நவநீதப் பாட்டியலிலும் இவ்வயது வேறுபட்டுக் காணப்படுகிறது.

ஐந்து முதலே ழாண்டும் **பேதை**
எட்டு முதனுன் காண்டும் **பெதும்பை**
ஆறிரண் டோன்றே யாகு **மங்கை**
பதினுன் காதிபத் தோன்பான் காறும்
எதிர்தரு **மடந்தை**மே லாறு **மரிவை**
ஆறு தலையிட்ட விருபதின் மேலோர்
ஆறுந் **தெரிவை**யெண் ணைந்து**பே** ரிளம்பெண்என்
றேரும் பருவத் தோர்க்குரைத் தனரே.

(இலக்-விளக் 99-103)

பகருங்கா லைந்தேழ் பதினென்று பன்மூன்
றகலாத பத்தோன்பா னையைந்—திகலாத
முப்பத்தோன் றீரிருபான் பேதைமுத லோர்க்குச்
செப்புவராண் டெல்லைத் திறம்.

(வெண்-பாட் 26)

பேதை முதலெழு வோர்க்குப் பிராயங்கள் பேசிடுங்கால்
ஆதியி லைந்தேழ் பதினென்று பன்மூன்று பத்தோன்பதே
மீதிரு பத்தைந்து முப்பத்தோன் ருகிய நாற்பதேன
ஓதுவர் தோன்னூற் பருணித ரெல்லாம் உணர்ந்து

(நவநீத-46)

இம்மூன்றனையும் ஒப்புநோக்கின் வேறுபடுநிலை காணலாம். மூவரும் 5-வயது தொடங்கிக் குறிப்பிடுகின்றனர். ஒருவர் 56 வயது வரைப் பெண்டிர் பருவத்தைக் குறிக்க, மற்றிருவரும் 40 வயதோடு நிறுத்துகின்றனர். அத்துடன் ஒரு பருவத்திற்கும் மற்றொரு பருவத்திற்கும் உள்ள கால இடையீட்டிலும், மாறுபாடுளது. இதனைக் கீழ்வரும் பட்டியல் கொண்டு தெளியலாம்:

		போய்கையார்	வச்சணந்திமாலை இ. வி. பாட்டியல்	நவநீதப் பாட்டியல்
1.	பேதை	(5)—8=4 யாண்டுகள்	(5)— 7=3 ஆண்டு	(5)— 7=3 ஆண்டு
2.	பெதும்பை	9—10=2 ,,	8—11=4 ,,	8—10=3 ,,
3.	மங்கை	11—14=4 ,,	12—13=2 ,,	11—12=2 ,,
4.	மடந்தை	15—18=4 ,,	14—19=6 ,,	13—18=6 ,,
5.	அரிவை	19—24=6 ,,	20—25=6 ,,	19—24=6 ,,
6.	தெரிவை	25—29=5 ,,	26—31=6 ,,	25—30=6 ,,
7.	பேரிளம்பெண்	30—(56)=7 ,,	32—(40)=9 ,,	31—(40)=10 ,,

வயது வேறுபடினும் உலாவில் கவனிக்கத் தக்கது யாதெனில், இந்த எழுவகைப் பருவத்துக்குரிய குணம் அறிந்து, அவ்வப்பருவத்துக்குரிய இயல்பினை எடுத்து மொழிதல் வேண்டும்; அங்ஙனமின்றி-அந்த அந்த பருவத்துக் குணம் தவறிப் பாடின் குற்றமாம்.

(தொடரும்)

மதிப்புரை

தொல்காப்பிய ஆராய்ச்சி

ஆசிரியர் :- சி. இலக்குவனார், எம்.ஏ., எம்.ஓ.எல்.
தமிழ்த்துறைத் தலைவர்,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

கிடைக்குமிடம் :- **வள்ளுவர் பதிப்பகம்**
வடக்குப் பெரிய வீதி,
புதுக்கோட்டை.

விலை :- ரூ. 5

இந்நூல் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியத்தின் எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றதிகாரத்தின் கருத்துக்களையும் கற்றாரும் மற்றாரும் எளிதிற் புரிந்துகொள்ளும் முறையில் பேராசிரியர், சி. இலக்குவனார் அவர்களால் அழகுற எழுதப்பட்டுள்ளது. முற்பகுதியில் நூலின் பெயரையும், ஆசிரியரின் பெயரையும் விளக்குந் திறம் போற்றற்குரியது. இலக்கியம் காலப்போக்கில் இலக்கண வரம்பைக் கடந்து செல்லும் ஆற்றல் வாய்ந்தது என்பதை நன்கு விளக்குகின்றார் ஆசிரியர்.

தொல்காப்பியரால் திருத்தமுற அமைக்கப்பெற்றுள்ள நெடுங்கணக்கு எழுத்துக்களில் எதனையும் குறைக்கவோ கூட்டவோ தேவையில்லை என்பதைத் தெளிவுறவிளக்குகின்றார். "தொல்காப்பிய காலத்துக்குப் பின்னர்தான் சகரத்தை முதலாகக்கொண்ட சொற்கள் தோன்றின" என்பதும் "உகரக்கிளவி துவரத் தோன்றாது" (நூ 411) என நூலாசிரியர் கெடுதல் விகாரமாகக் கூறியிருப்பவும் 'குற்றியலுகரம் குற்றியலிகரமாகத்திரியும்' என்ற கருத்தும் சிந்தனைக்குரியன.

'நன்னூலார் கூறிய ஆலும் இல்லும் சந்திச் சொற்களைப் பிரிக்கும் முறையில் ஆன், இன் என்பவற்றிலிருந்து ஏற்பட்டன' என்பதும், 'கண், கால், புறம் முதலியவற்றைப் பொருள்வகையெனக் கூறும் சேனாவரையர் கொள்

கையை மறுத்து, உருபுவகை என்ற இளம்பூரணர் கொள் கையை எடுத்துக்காட்டு மூலம் விளக்குந்திறமும் சிறப்பிற் குரியன. உரிச்சொல்லுக்கு இவர் கொடுக்கும் விளக்கம் புதுமை வாய்ந்தது. பக் 109ல் இதனைப் படித்துணர்க.

தெய்வம், பசு முதலிய சொற்களைத் தமிழ்ச் சொற்கள் என்று நிலைநாட்டுவதும், நிலையாமை யுணர்ச்சி முயற்சிக்குத் தடையாக இராது என்பதை விளக்கும் முறையும் யாவரும் அறிதற்குரியன. ‘கொள்ளார் தேயங்குறித்த கொற்றம்’ என்ற துறைக்குத் தற்கால அரசியற் கருத்துக்களை ஒப்புமைப்படுத்தி எழுதுந்திறமை வியத்தற்குரியது காதல் பற்றி நூல் எழுதுவோருக்கும், காதலர்களாக நடிப்போர்க் கும், திரைப்பட இயக்குநர்க்கும் மெய்ப்பாட்டியல் கொண்டு அறிவுரை கூறியது பாராட்டற்பாலது. பொருளதிகார இயல் வைப்பு முறையை மாற்றியமைக்குங்கருத்து ஆய்வுக் குரியது. மரபியலில்சில நூற்பாக்கள் இடைச்செருகல்என்று கூறப்பட்டுள்ளன. மொழித்துறையில் புலவர்க்குத்தான் முதன்மையளித்தல்வேண்டும் என்பதை நன்கு நிலைநாட்டு கின்றார். இஃது இன்றைய அறிஞர்கள் யாவரும் அறிய வேண்டியதொன்றும்.

இக்காலத்து மொழிநூலறிஞர் போற்றி வளர்த்துவரும் மொழிநூல் மெய்ம்மைகளையும் இலக்கியத் திறனாய்வுக் கோட்பாடுகளையும் ஏறத்தாழ 2500 ஆண்டுகட்கு முற்பட்ட தொல்காப்பியம் தன்னகத்தே கொண்டு மிளிரும் தகைமை யினை ஆங்காங்குச் சுட்டிச்செல்வது மிகவும் பாராட்டத்தக் கது.

சுருங்கக் கூறின் இந்நூலைப் படிக்கும் யாவரும் தொல் காப்பியரது பல சிறந்த கருத்துக்களைக் கற்பிக்கும் ஆசிரியர் துணையின்றி எளிதிற்புரிந்துகொள்ள முடியும் என்பது உறுதி.

வித்துவான் கு. மா. நாராயணசாமி

அறிக்கை

"செந்தமிழ்"

1. அச்சிடுமிடம்: விவேகானந்தா அச்சகம், மதுரை.

2. வெளியிடும் காலம்; திங்கள் தோறும்.

3. அச்சிடுபவரின் பெயர் தமிழவேள், பி. டி. இராஜன், B. A. (Oxon)Bar-at-law, M.L.C,

இனம்: இந்து.

முகவரி: மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை.

4. ளியிடுபவரின் பெயர் தமிழவேள், பி. டி. இராசன், B.A. (Oxon)Bar-at-law, M.L.C.

இனம்: இந்து

முகவரி: மதுரைத் தமிழ்க் சங்கம், மதுரை.

5. ஆசிரியரின் பெயர்: தமிழவேள், பி. டி. இராசன், B.A. (Oxon)Bar-at-law, M.L.C.

இனம்: இந்து

முகவரி: பாளையம் இல்லம், தல்லாகுளம் (அஞ்சல்) மதுரை.

6. இதழின் உரிமையாளர்களின் பெயர்களும், முகவரியும் அல்லது மேற்படி இதழின் ஒரு சத விகிதத்திற்கு அதிகமான மூலதனம் போட்டுள்ளவரின் பெயர்களும், முகவரிகளும் } மதுரைத் தமிழ்ச்சங்கம். மதுரை.

பி. டி. இராசனாகிய நான், என் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் நன்குதெரிந்தமட்டில், மேலேகொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் யாவும் உண்மையானவை என்று அறிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்,

மதுரை
14—3—62 } பி. டி. இராசன்,
வெளியிடுபவர்,

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

I. சங்க வெளியீடு

			ரூ.	அ.	ப.
4.	வைத்தியசாரசங்கிரகம்	—	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	—	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம்	—	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் நச். உரை)	—	1	12	0
11.	திருவருணைக் கலம்பகம்	—	0	6	0
13.	கல்லைச்சிலேடை வெண்பா	—	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	—	0	4	0
16.	ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சனம்	—	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (தொகுப்பு)	—	0	4	0

II. செந்தமிழ் வெளியீடு

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	—	0	4	0
2.	கணுநூல் (5) இனியது நாற்பது (உரை)	—	0	3	0
4.	புலவராற்றுப்படை	—	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	—	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	—	0	8	0
9.	அநுமான விளக்கம்	—	0	10	0
10.	அட்டாக யோகக்குறள்	—	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	—	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	—	0	4	0
14.	முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்	—	0	3	0
16.	திருவாரூருலா	—	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	—	0	12	0
18.	இயற்கைப் பொருட்பாடம்	—	0	4	0
19.	தேவையுலா	—	0	3	0
21.	சிதம்பரப் பாட்டியல் (உரையுடன்)	—	0	8	0
22.	திருக்கலம்பக மூலமும் உரையும்	—	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	—	0	8	0
24.	குருமொழி விஞவிடை	—	0	1	0
25.	கேசவப் பெருமாள் இரட்டைமணிமாலை	—	0	2	0
26.	திருத்தணிகை திருவிருத்தம்	—	0	1	0
27.	மதுரைத் திருப்பணிமாலை	—	0	8	0
30.	ஞானமிர்தக் கட்டளை	—	0	3	0
32.	மநீஷாபஞ்சகம்	—	0	8	0
33.	உவமான சங்கிரகம்	—	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	—	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	—	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்	—	0	8	0
41.	பொருட்டொகை நிகண்டு	—	0	6	0
42.	அகராதி நிகண்டு	—	0	12	0
43.	மேகவிடு தூது	—	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	—	0	2	0
45.	தண்டலையார் சதகம்	—	0	4	0
46.	இராமோதந்தம்	—	0	3	0
47.	பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100)		1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	—	0	6	0
49.	கூடற்புராணம்	—	0	10	0
50.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	—	0	6	0
51.	அரும்பொருள் விளக்க நிகண்டு	—	1	4	0
52.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	—	0	12	0
53.	பாப்பாவினம்	—	0	10	0
54.	மதுரை மும்மணிக்கோவை	—	0	5	0
55.	பழனிப் பிள்ளைத்தமிழ்	—	0	3	0
56.	கடம்பர் கோயில் உலா	—	0	6	0
57.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	—	0	6	0
58.	கலைசைக்கோவை	—	0	12	0
59.	பெருந்தொகை	—	5	0	0
60.	சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை	—	0	5	0
61.	சிராமலைக்கோவை	—	0	12	0
62.	மத்யவியாயோகம்	—	0	2	0
63.	அமிர்தரஞ்ஜநி	—	0	2	0
64.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்	—	0	8	0
65.	திருச்சிறுபுலியூருலா	—	0	12	0
66.	துணைத்தலைவர் நினைவுமலர்	—	0	10	0
67.	மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர்	—	2	0	0

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் ''செந்தமிழ்'' இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4 - 50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகியிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7. 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.

2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபாய் ஒன்றுக்கு 3 காசு வீதம் கழிவு தள்ளிக் கொடுக்கப்படும்.

இவ்விதம், மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள். திரு. பி. டி. இராசன் (B. A. Bar-at-law.) M. L. C. அவர்களால் மதுரை விவேகாநந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.